**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

Deposition of Witness

O.S. 276/2016

பி.வா.சா3 மாரியப்பன்

| | |
|---|---|
| Name | : மாரியப்பன் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | :20.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த வழக்கின் 3ம் நபர். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

1. என்னுடைய ஆதார்அடையாள அட்டை ஜெராக்ஸ் நகல் மூ.த.சா.ஆ 1.

என்னிடம் காண்பிக்கப்பட்ட 16.09.1999 தேதியிட்ட கனகரத்தினம் என்பவரிடம் இருந்து முத்துகிருஷ்ணன் என்பவர் கிரையம் வாங்கிய ஆவணமாகும். எனக்கு 10.04.2003 தேதியில் அதே சொத்தை முத்து கிருஷ்ணனிடம் இருந்து நான் கிரையம் வாங்கியுள்ளேன். நான் அதே சொத்தை 8.12.2021 தேதி தாமரைகவிதா என்பவருக்கு விற்பனை செய்து விட்டேன்.

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு இந்த வழக்கு யார் யாருக்கு இடையே நடைபெறுகிறது என்று தெரியாது. என்ன வழக்கு என்பது பற்றி எனக்கு தெரியாது. வணிக சங்கத்தின் பொருளாளர் ஆரோக்கியராஜ் என்பவர் என்னை சாட்சியம்

அளிக்க அழைத்தார் வந்தேன். ஆரோக்கியராஜ் என்னுடைய இடத்தையும் கிரையம் வாங்கியுள்ளார். என் இடத்திற்கு கீழ்புறம் தென்வடல் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த ரோடு எங்கிருந்து வருகிறது என்றால் மெயின் ரோட்டில் இருந்து வருகிறது. வணிக சங்க சொத்துக்கு அடுத்த வடபுறம் கிழமேல் தெரு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய இடத்தில் வீடு கட்டவில்லை. காலியாக உள்ளது. பி.வா.சா.ஆ 10 முதல் 12 ஆவணங்களை சான்றாவணங்களாக தற்போது தான் நீதிமன்றத்தில் பார்த்தேன். நான் எனது அசல் ஆவணங்களை வணிகசங்க நிர்வாகிகள், வழக்கறிஞரிடம் காண்பிக்கவில்லை. முதல் விசாரணை வாக்குமூலம் தயார் செய்ய அழைத்து வந்தது யார் என்றால் ஆரோக்கியராஜ் தான் அழைத்து வந்து தயார் செய்தார். எனக்கு சொந்த பூர்வீகமான ஊர் எது என்றால் திருநெல்வேலி நகரம் ஆகும். எனக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு அடுத்த கீழ்பக்கம் கணேசன் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ளதாக முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். கணேசனுக்கு பாத்தியப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் பார்த்துள்ளோ என்றால் பார்க்கவில்லை. வணிக சங்கம் வாங்க வேண்டிய சொத்தை நான் வாங்க வேண்டியதாக இருந்தேன். யாரிடம் வாங்குவதாக இருந்தேன் என்றால் கணேசனிடம் வாங்குவதாக இருந்தேன். எந்த வருடம் கணேசனிடம் சொத்தை வாங்க முயற்சி செய்தேன் என்றால் 1999 ல் 2004 ம் ஆண்டு வரை வாங்குவதாக இருந்தேன். நான் சொத்துக்களை வாங்குவதாக முன் வில்லங்கத்தை பார்த்தேனா என்றால் நான் கிரையம் வாங்கும் அளவிற்கு செல்லவில்லை. ஆவணங்களை பார்வையிடவில்லை. எதன் அடிப்படையில் அந்த சொத்து கணேசன் சொத்து என்று இருந்தேன் என்றால் என் மாமா

சொன்னதன் அடிப்படையில்கணேசன் சொத்து என்று தெரியும். அவருடைய உரிமைமூல ஆவணத்தை நான் வாங்கி பார்க்கவில்லை. என்னுடைய ஆவணத்தில் கணேசனின் எல்கை வருவதால் கணேசனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என நினைத்துள்ளேன். சொத்தில் ஷெட் அமைத்து மர துண்டுகள் வைத்திருந்ததை நான் நேரடியாக பார்க்க வில்லை என்றால் சரியல்ல. பார்த்தேன். என் வீடு வழக்கு சொத்தில் இருந்து 2 கி.மீட்டர் தொலைவில் பாவூர்சத்திரம் முதல் சுரண்டை ரோட்டில் சந்தை ரோட்டில் உள்ளது. வணிகர்சங்கம் எவ்வாறு சொத்துக்களை வாங்கியது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வேண்டும் என்பதற்காக வழக்கு சொத்தில் மரஅறுவை, மரதுண்டுகள் வைத்திருந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.